கல்யாண, முகூர்த்தப் பட்டுப் புடைவைகளுக்கு கைராசியான இடம்
இளவரசி
சேலைச் சோலை
57, சிறப்பு அங்காடி, (உள்ளகம்) யாழ்ப்பாணம். [சி-9729]

பக்கங்கள்: நான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

பட்டுச் சேலைகளின் சோலையாகத் திகழும் ஒரே இடம்!
இளவரசி
சேலைச் சோலை
57, சிறப்பு அங்காடி, (உள்ளகம்) யாழ்ப்பாணம். [சி-9729]

சுடர்: 10 திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை 26 திங்கட்கிழமை (12 — 12 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 16

# தற்போதைய சமாதான முயற்சி தோற்றால்
# சர்வதேச உதவியுடனாவது முயற்சி தொடரும்!

## தீர்வுத் திட்டம் குறித்து சந்திரிகா அறிவிப்பு



கொழும்பு, டிச. 12

உள் நாட்டில் தற்போது மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள் பயனளிக்காத பட்சத்தில் சர்வதேச உதவியுடனாவது நாம் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வோம்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்கண்டவாறு அறிவித்திருக்கிறார்.

கடந்த செவ்வாய்க்கிழமை தம்மைச் சந்தித்துப் பேசிய தமிழ்க் குழு ஒன்றின் பிரதிநிதியிடம் ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார். அலரி மாளிகையில் இச் சந்திப்பு ஒன்றரை மணி நேரம் நீடித்தது.

அப்போது திருமதி சந்திரிகா மேலும் தெரிவித்ததாவது; சமாதான முயற்சிகள் எவ்வகையிலும் நிறுத்தப்படமாட்டா. தற்போதைய சமாதான முயற்சிகள் வெற்றியளிக்கும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. இம் முயற்சியில் நாம் தோல்வியை எதிர்

( 4 ஆம் பக்கம் பார்க்க)

## உ. த பரீட்சை முடிவுகள் இன்று

யாழ்ப்பாணம், டிச. 12

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் வெளியான ஜி. சீ. ஈ. (உயர்தரப்) பரீட்சை முடிவுகளின் யாழ் மாவட்டத்துக்கான பெறுபேறுகள் இன்று யாழ்ப்பாணத்தில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

விமான மூலம் பலாலிக்கு வந்து சேரும் இந்த முடிவுகள் கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு இன்று எடுத்து வரப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக கல்வி அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(உ-3)

## மணலாறில் போராளி வீரச்சாவு

யாழ்ப்பாணம், டிச. 12

மணலாறு பிரதேசத்தில் நேற்று முன்தினம் இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதல் ஒன்றில் விடுதலைப் புலிகள் இயக்க போராளியான வீரவேங்கை மகிழ்நன் (தேவதாஸ் சசிகரன் — வவுனியா) வீரச்சாவடைந்தார்.

(உ-3)

## சமாதான முயற்சியில் இழுத்தடிப்பு; அரசு மீது தெற்கு மக்கள் அதிருப்தி!

கொழும்பு, டிச. 12

தேர்தல்களின்போது வாக்குறுதி அளித்தபடி இனப்பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வுகாணும் விடயத்தில் புதிய அரசு அதிகம் அக்கறை காட்டாமல் காலதாமதம் செய்வது தென்பகுதி மக்கள் மத்தியில் அதிருப்தியைத் தோற்றுவித்துள்ளது.

தேர்தல் காலத்தில் பெரிதாகப் பேசப்பட்டு வந்த இனப்பிரச்சினை குறித்து புதிய அரசு தற்போது மௌனம் சாதிப்பது ஏன்?

பி. பி. ஸியின் சிங்கள சேவையான 'சந்தேசயவிற்கு' அதன் நேயர்கள் பலரும் எழுதியுள்ள கடிதங்களில் முன்கண்டவாறு கேள்வி எழுப்பியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேயர்களின் இந்தக் கேள்விக்கு நேரடியாக பதில்கூற முடியாது என்றும் —

ஆயினும் இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அச்சுவேலித் தம்பதிகள் சுவிஸில் சுட்டுக் கொலை

அச்சுவேலி, டிச. 12

அச்சுவேலியைச் சேர்ந்த இளம் கர்ப்பிணியும் அவரது கணவரும் சுவிஸில் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பதாக உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நாவற்காடு அச்சுவேலியைச் சேர்ந்த ஐயாத்துரை உதயகுமார் (வயது 27) அவரது மனைவி வத்சலா (வயது 24) இருவருமே கொலை செய்யப்பட்டவர்களாவர்.

இச்சம்பவம் குறித்து கொழும்பில் வசிக்கும் நெருங்கிய உறவினர்கள் அச்சுவேலியில் உள்ள உறவினர்களுக்கு அறிவித்துள்ளனர்.

(உ-11)

## செயலகப் பணிகள் சுமுகமாகத் தொடரும்

### புதிய அரச அதிபர் தகவல்

யாழ்ப்பாணம், டிச. 12

யாழ்ப்பாண மாவட்டத்தில் இப்போது மேற்கொள்ளப்பட்டு வரும் வழமையான பணிகள், எவ்வித மாற்றமும் இன்றி சுமுகமான முறையில் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும்.

யாழ்ப்பாணத்தின் புதிய அரசாங்க அதிபராக இன்று பணிபுரியத் தொடங்கும் திரு. க. பொன்னம்பலம் நேற்று மாலை இவ்வாறு உதயனுக்குத் தெரிவித்தார்.

திரு. பொன்னம்பலம் கடந்த மாதம் 18ஆம் திகதி முதல் யாழ். அரசாங்க அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார்.

அவர் இன்று தொடக்கம் செயலகத்தில் தமது பொறுப்புகளை ஏற்றுப் பணிபுரியத் தொடங்குகிறார்.

கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள திரு பொன்னம்பலம், அங்கு ஒருவர் பதவி ஏற்கும்வரை — ஜனவரி மாதம் வரை — தொடர்ந்தும் கிளிநொச்சி அரச அதிபராகவும் பணி

(4ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் சோதனை அம்பாறையில் தீவிரம்!

கொழும்பு, டிச. 12

அம்பாறை மாவட்டத்தின் தமிழ், முஸ்லிம் பிரதேசங்களில் விசேட அதிரடிப்படையினர் புதிதாக வீதித் தடைகளை ஏற்படுத்தி சோதனை நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்திவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெளியிடங்களில் இருந்து தமிழ் கிராமங்களுக்குச் செல்லும் வாகனங்கள் கடும் சோதனைக் குட்படுத்தப் படுகின்றன. பயணிகளும் விசாரணை செய்யப்படுகின்றனர்.

இதேவேளை—

திருக்கோவில், தம்பிலுவில், அக்கரைப்பற்று ஆகிய தமிழ்க் கிராமங்கள் அடிக்கடி சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்படுகிறது. தேசிய அடையாள அட்டை இல்லாதோர் தேடுதலின் போது கடுமையான தொல்லைகளுக்கு ஆளாக நேரிடுவதாக கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

(உ-ஐ)

## மாவட்ட நிர்வாகத்தை ஒருங்கிணைக்க முயற்சி

### அரச அதிபர் மேற்கொள்வார்

யாழ்ப்பாணம், டிச. 12

யாழ்ப்பாண மாவட்டத்தின் நிர்வாகத்தை ஒருங்கிணைத்து ஒரே கட்டமைப்பின் கீழ் இயங்க வைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்படும் என்று யாழ். அரச அதிபர் திரு க. பொன்னம்பலம் தெரிவித்தார்.

யாழ். செயலகம் மாவட்டத்தின் அமைச்சரவையாக விளங்கும் விதத்திலும், மாவட்டத்தின் பிரதேச செயலாளர்கள் அமைச்சர்களாகப் பங்களிப்புச் செய்யும் விதத்திலும் புதிய கட்டமைப்பு அமையும் என்று அவர் சொன்னார்.

மக்கள் நலனைக் கருத்தில் கொண்டே இந்த ஒருங்கிணைந்த கட்டமைப்பு உரு

( 4 ஆம் பக்கம் பார்க்க)

கிழக்கு மாகாணத்தில்

## வேலிக்கிடுகுகளை அகற்ற படையினர் உத்தரவு

கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ்க்கிராமங்களில் வீதி ஓரங்களில் உள்ள வளவுகளின் வேலிகளில் இருந்து கிடுகுகளை அகற்றும்படி படையினர் உத்தரவிட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

வளவுகளுக்குள் நடமாடுபவர்கள் வெளியே தெரியக் கூடியதாக வேலிகள் அடைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று படையினர் கிராம வாசிகளிடம் கூறியுள்ளனர்.

உயரமான மதில்களில் இடைவெளிகள் இருக்க வேண்டும் என்றும் படையினர் சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரிவித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருக்கோயில் மற்றும் அக்கரைப்பற்றுப் பகுதிகளிலேயே இப்பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரமாக அமுலாக்கப்பட்டு வருகின்றன. (எ)

ஜி. சீ. ஈ. (சா. த.) பரீட்சை

## கணிதபாட வினாத்தாள் முன்னரே வெளியானது!

### கந்தளாயில் சம்பவம்

கொழும்பு, டிச. 12

தற்போது நடைபெற்று வரும் ஜி. சீ. ஈ. (சாதாரண தரம்) பரீட்சையின் கணித பாட வினாத்தாள் முன்கூட்டியே வெளியானதாக கூறப்படும் சம்பவம் குறித்து பரீட்சைத் திணைக்களம் விசாரணை நடத்திவருவதாக அறிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் இடம்பெற்ற

(4 ஆம் பக்கம் பார்க்க)

மன்னார் கடலில் கடற்படையினர் தாக்குதல்

## அரசு அனுமதியளித்த கடற் பகுதியில் தொழிலில் ஈடுபட்ட மீனவர் மீது சூடு!

மன்னார் தாழ்வுப்பாடு கடலில் கடந்த புதனன்று காலை 6 – 30 மணியளவில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர் மீது கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மீனவர் ஒருவர் படுகாயமடைந்தார்.

மன்னார் கடலில் ஒரு மைல் தூரத்துக்குள் மீன் பிடிப்பதற்கு அரசு அனுமதி அளித்த பின்னர் இத் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பது மீனவர் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியிருப்பதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் குறித்து மன்னார் மேலதிக அரச அதிபர் திரு. எஸ். எம். குரூஸ் உடனடியாக மன்னார் மாவட்ட பிரிகேடியர் எஸ். எச். எம். கொட்டேகொடவுக்கு தகவல் கொடுத்தார்.

அதனையடுத்து காயமடைந்த மீனவர் ஹெலி மூலம் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் இச் சம்பவத்தைத் தொடர்ந்து தாழ்வுப்பாடு இறங்குதுறையில் கப்பல்களில் இருந்து பொருள்களை இறக்கும் தொழிலாளர்கள் தமது பணியை மேற்கொள்ள அச்சம் தெரிவித்துள்ளனர்.

1982ஆம் ஆண்டுக்குப் பின்

## 25 ஆயிரத்து 826 சிப்பாய்கள் ராணுவத்தை விட்டு தப்பி ஓடினர்

### அனுருத்த ரத்வத்தை நாடாளுமன்றில் தகவல்

1982ஆம்ஆண்டு முதல் இதுவரை படையினரில் 25 ஆயிரத்து 826 பேர் இராணுவத்தை விட்டு தப்பி ஓடி விட்டனர் என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை தெரிவித்துள்ளார்.

இவர்களை பொது மன்னிப்பின் அடிப்படையில் மீண்டும் படையில் சேர்த்துக் கொள்ளும் திட்டமொன்று இருப்பதாகவும் அவர் கூறினார்.

அண்மையில் இரத்னபுரி நாடாளுமன்ற உறுப்பினரான வாசுதேவ நாணயக்கார "இராணுவத்திலிருந்து ஓடிய சிப்பாய்களின் உண்மையான எண்ணிக்கை என்ன"? என்று நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளிக்கையிலேயே பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(இ-9)

## தேசிய முன்னணிக்கு மீண்டும் புத்துயிர்!

### வி. பி. சிங் அறிவிப்பு

புதுடில்லி, டிச. 12

தேசிய முன்னணிக்கு மீண்டும் புத்துயிர் கொடுக்க முன்வருமாறு முன்னாள் பிரதமர் வி. பி. சிங் நாட்டு மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

அண்மையில் நடந்த மாநிலத் தேர்தல்களில் ஆளும் காங்கிரஸ் கட்சியை மக்கள் நிராகரித்துள்ளனர். எனவே இந்நிலையில் தேசிய முன்னணியின் தேவை மீண்டும் நாட்டுக்கு அவசியமாகியுள்ளது என்றும் வி. பி. சிங் தெரிவித்துள்ளார்.

ஆந்திரா மற்றும் கர்நாடகாவில் இடம்பெற்ற தேர்தல்களில் தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் தெலுங்கு

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ராவ் பதவி விலகி புதிதாக ஆணைபெறவேண்டும்

### பாரதீய ஜனதா கோரிக்கை

கான்பூர், டிச 12

பிரதமர் நரசிம்மராவ் தலைமையிலான இந்திரா காங்கிரஸ் அரசு உடனடியாக பதவி விலகி, புதிதாக மக்களின் ஆணையைப் பெற வேண்டும்.

பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர்களில் ஒருவரான திரு. அடல் பிஹாரி வாஜ்பாய் முன்கண்டவாறு தெரிவித்தார்.

கான்பூரில் செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனை வெளியிட்டார்.

ஆந்திரா, கர்நாடகம், கோவா மற்றும் சிக்கிம் ஆகிய

[4 ஆம் பக்கம் பார்க்க]

## கர்நாடகம், ஆந்திரா, சிக்கிம் புதிய முதல்வர்கள் தெரிவு

புதுடில்லி, டிச. 12

இந்தியாவில் அண்மையில் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தல்களில் வெற்றிபெற்ற கட்சிகளின் சட்டப்பேரவைத் தலைவர்கள் சம்பந்தப்பட்ட மாநிலங்களின் முதலமைச்சர்களாகப் பதவியேற்கவிருக்கின்றனர்.

கர்நாடக மாநிலத்தின் முதலமைச்சராக ஜனதா தள் கட்சியைச் சேர்ந்த தேவ கௌடாவும், துணை முதலமைச்சராக ஜெய்பித் பட்டேலும் நேற்று மாலை சத்தியப் பிரமாணம் செய்துகொண்டனர்.

பெங்களூர் ராஜ்பவனில் ஆளுநர் குர்ஷித் ஆலம் கான் முன்னிலையில் இந்த வைபவம்

[4 ஆம் பக்கம் பார்க்க]

பகிஷ்கரிப்பை கைவிட்டு

## நாடாளுமன்றுக்குச் செல்ல நீதிமன்றம் உத்தரவு!

### பங்களாதேஷில் முக்கிய தீர்ப்பு

டாக்கா, டிச. 12

கடந்த மார்ச் மாதம் முதல் நாடாளுமன்றத்தை பகிஷ்கரித்து வரும் பங்களாதேஷ் எதிர்கட்சித் தலைவர்களை பகிஷ்கரிப்பை விடுத்து நாடாளுமன்றத்துக்குச் செல்லும்படி பங்களாதேஷ் மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்தது.

இரண்டு நீதிபதிகளைக் கொண்ட நீதிமன்றம் மனு ஒன்றின் மீது சரித்திரப் பிரசித்தி பெற்ற இத்தீர்ப்பை வெளியிட்டது.

எதிர்க்கட்சித் தலைவர்களான ஷேக் ஹஸீனா வாஜித் (அவாமி லீக்), மொதூக் அகமத் (ஜாதியா கட்சி), மௌலானா மத்தியூர் ரஹ்மான் நிஸாமி (ஜமாத் இஸ்லாமி கட்சி) ஆகிய எதிர்க்கட்சித் தலைவர்கள் நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரித்து வருவது அரசமைப்புக்கு முரணானது என்றும் நீதிமன்றம் அறிவித்தது.

இத்தீர்ப்பை எதிர்த்து உயர் நீதிமன்றத்திடம் தாங்கள் மேன்முறையீடு செய்யப் போவதாக மூன்று தலைவர்களும் அறிவித்துள்ளனர்.

நடுநிலையான காபந்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கரையொதுங்கிய சடலம்!

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று நெல்லியான் கடற்கரையில் இனந் தெரியாத இளைஞர் ஒருவரின் சடலம் கடந்த வெள்ளியன்று கரையொதுங்கியது. அடையாளம் காண்பதற்காக அந்தச் சடலம் காவல்துறையினரால் மந்திகை ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இவ்வாரம் தருவிக்கப்பட்ட புதிய 1995 மாதக்கலண்டர்கள் விற்பனைக்குண்டு. உங்கள் விலாசமிட்டு எம்மிடம் அழகாக மலிவாக பதிப்பித்தும் கொள்ளலாம். மகாலக்சுமி அச்சகம், 127, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (8066)

சித்தன்கேணி சந்தி, கணேச வித்தியாசாலைக்கு அருகில் பிரதான வீதியில் கடைகள் கட்டக்கூடிய எட்டுப் பரப்புக் காணியில், நல்ல தண்ணீர் கிணற்றுடன் வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ராசா, 27, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (34125)

சகல பாடசாலை புத்தகங்களும் குறித்த விலையில் இருந்து 5% கழிவுடன் விற்பனையாகின்றன. பாடசாலை உபகரணங்கள், கொப்பிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் என்பன நியாய விலையில் விற்பனையாகின்றன. ஞானம் புத்தக நிலையம், நாச்சிமார் கோயிலடி, 635, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (8063)

### விற்பனையாகிறது

சிவம் கலண்டாகள் பொக்கற் கலண்டர்கள், வியாபாரத்திற்கு அடித்து கொடுப்பதற்குரிய சகல கலண்டர்களும், டயறிவகைகளும் விற்பனையாகின்றன. வியாபாரிகளுக்கு விசேஷ கழிவு உண்டு. ஸ்ரீகாந்தா புத்தகசாலை, 165, மின்சார நிலையம் தலைமையகம்: மக்மிலன், யாழ்ப்பாணம். (சி-9929)

### மலிவு விற்பனை

பாடசாலை மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகளும், ஆண்டு 1 தொடக்கம் உயர்கல்வி வரையிலான பாடப்புத்தகங்கள் மலிவு விலையில் விநியோகிக்கப்படுகின்றன. நேர அட்டவணை, கலண்டர்களும் இலவசம். அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி (வெலிங்டன் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். (சி-9936)

### சேவை

குறைந்தசெலவில் நிறைந்த சேவை. தமிழ், ஆங்கில தட்டச்சம் மற்றும் றோணியோ பிரதிகளும் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: திருமால் அச்சகம், 393, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (34130)

### இலகு திருமண சேவை

38 வயது, பரணி செவ்வாய் 2, கொழும்பு Airlanka நிறுவனத்தில் கடமைபுரிபவருக்கு 32 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை. புதன் மாலையில் சந்திக்கவும். து. விமலா, யாழ். நாச்சிமார் கோயிலடி. (3[illegible]1)

### பெண் கட்டர் தேவை

ஆடை தயாரிப்பு நிலையம் ஒன்றுக்கு விதம் விதமாக மாதிரி உடைகள் வெட்டிக் கொடுப்பதிலும், மற்றும் உள்ளங்கி (பிறா) வெட்டித் தைப்பதிலும் பயிற்சி உள்ள பெண்கள் தேவை. 31-12-94 முன்பாக விண்ணப்பிக்கவும். இல. 728, மே/பா உதயன், யாழ்ப்பாணம் (சி-9883)

### வினாத்தாள்

ஆண்டு 5 (புலமைப்பரிசில் 1995) 11-12-94 வெளியிடப்பட்ட மாதிரி வினாத்தாள்களையும் ஆண்டு 4 (புலமைப் பரிசில் 1996) மாதிரி வினாத்தாள்கள் 18-12-94 ஞாயிறு வெளியிடப்படும். தேவையானோர் பெற்றுக்கொள்ளலாம். புதிய கல்வி நிலையம், இல. 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (34152)

### குருமாற்ற பலன்கள்

வியாழமாற்றம் ரூ 10/-. (ஜனாதிபதி சந்திரிகாவின் ஜெனன ஜாதகம் உட்பட) Dr. B. V Raman's Astrological Magazines. 1994-Series பாடசாலை உபகரணங்கள் விற்பனையாகின்றன. மக்மிலன், சுரேகா புத்தகசாலைகள், யாழ்ப்பாணம். (T 828)

## பொலீஸ் அதிகாரிகள் இடமாற்றம்

கொழும்பு, டிச. 12

பொலீஸ் உயரதிகாரிகள் பலர் இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

44 சிரேஷ்ட பொலீஸ் அதிபர்கள், பொலீஸ் அதிபர்கள், உதவி பொலீஸ் அதிபர்கள், பிரதம பொலீஸ் இன்ஸ்பெக்டர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்று பொலீஸ் தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது.

## நிறுவுநர் நினைவு பேச்சு போட்டி முடிவுகள்

வலிகாமம் தெற்கு, டிச. 12

மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி நிறுவுநர் நினைவு நாளை முன்னிட்டு பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் நடத்திய பேச்சு போட்டியில் அதிமேற் பிரிவில் செல்வி சத்தியவாணி மகாலிங்கமும், மேற் பிரிவில் செல்வி தக்ஷினி மகாலிங்கமும், மத்திய பிரிவில் செல்வி சுமதி கணேசனும் முதலிடத்தைப் பெற்று தங்கப் பதக்கங்கள் பரிசாகப் பெற்றுக் கொண்டனர்.

இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் இவர்களுக்கான தங்கப் பதக்கங்களை திருமதி இராஜலட்சுமி பாலசுந்தரம் பிள்ளை வழங்கினார்.

## பண்டிகைக் கால மலிவு விற்பனை

புதிய வகையான காலணிகளின் சங்கமம் இங்கு தான்!

# கீர்த்தனா வண்ணக் காலணிப் பூங்கா

24, பழைய பேருந்து நிலையம், யாழ்ப்பாணம்.

* சிறார்கள் * ம[illegible]ளிர் * ஆடவர்

அனை[illegible] வயதினரும்

த[illegible] மான காலணிகள்

கீர்த்தனாவின் மலிவு விற்பனையில்

[34154]

## முக்கிய அறிவித்தல்

வடபிராந்திய யாழ். ஆங்கில மருந்து வணிகர் மன்றத்தினால் பிற்போடப்பட்ட "அதிர்ஷ்ட லாப சீட்டிழுப்பு" (நத்தார் பண்டிகையன்று) 25-12-1994 ஞாயிற்றுக்கிழமை பி. பகல் 3மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருக்கின்றது. இன்றிலிருந்து விற்பனையை மேற்கொள்ளவுள்ளோம். அதனால் எமக்கு ஆதரவு அளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

செயலாளர்,
வ. யா. ஆ. ம. வ. மன்றம்.

(சி-9939)

புதுப் பொலிவுடன் ஆரம்பமாகிறது

## ஐடியல் கல்வி நிலையம்

இல. 42, பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை.
(தேசிய சேமிப்பு வங்கி அருகில்)

**ஆண்டு 5 முதல் 11 வரை**

ஆரம்பம்: இன்று (**12 · 12 · 94**) திங்கள் பி. ப. 3 மணி

விஞ்ஞானம்: — திரு. இரா. செல்வவடிவேல்
கணிதம்: — திரு. S. வாமதேவன்
— திரு. S. சண்முகநாதன்
ஆங்கிலம்: — திரு. T. சகாதேவன்
தமிழ்: — திரு. S. கதிர்காமத்தம்பி
சமூகக்கல்வி: — திரு. M. இக்னேஷியஸ்

விசேட ஆங்கில, சிங்கள வகுப்புக்களும் ஆரம்பமாகும்.

(341 40)

## சிவாகி கல்வி நிலையம்

சிவன் வீதி, சாவகச்சேரி.

**G.C.E O/L ஆண்டு 10, 9 வகுப்புகள்** நடைபெறுகின்றன.

| | | |
|---|---|---|
| கணிதம் | — | T. நித்தியானந்தன் |
| விஞ்ஞானம் | — | பிறேம் |
| தமிழ் | — | தர்மராஜா |
| ஆங்கிலம் | — | பாலமுருகன் |
| சமூகக்கல்வியும் வரலாறும் | — | R. நித்தி, T. ஜெபதாஸ் |
| வர்த்தகம் | — | ஆனந்தகுமார், கேதீஸ் |
| சமயம் | — | சுதன் |
| சித்திரம் | — | இராஜன் |

[34153]

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



வித்துவான் பண்டிதர் (B.O.L.)
**உயர்திரு. சி. நா. கணேசனார்**

தோற்றம்: 22—09—1909 மறைவு: 13—11—1994

ஆண்டுபவத் தைப்பசி யிருபத் தாறில்
பூண்டவளர் பக்கத் தசமியில் - வேண்டியிறை
வித்துவான் கணேசன் விரைந்தான் விமலனடி
முத்திவழி என்றே முயன்று

அன்னாரின் நினைவு நாளாகிய இன்று (12-12-94) திங்கட்கிழமை நண்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

[illegible] அளவெட்டி. (34138)

## ஆயுதம் கையளித்த பின் அமெ. சென்றார் பெஸ்டஸ்

ஐ. தே. க. அரசில் கடற்தொழில் அமைச்சராக இருந்த பெஸ்டஸ் பெரேரா சிலதினங்களுக்கு முன்னர் அமெரிக்கா சென்றுள்ளார் என்று அறிவிக்கப்படுகிறது.

அவர் அமெரிக்கா புறப்படும் முன்னர் 9 ஆயுதங்களையும் 570 ரவைகளையும் வென்னப்புவ பொலீஸில் ஒப்படைத்துள்ளார்.

பெஸ்டஸ் பெரேராவின் புதல்வரும், புதல்வியும் அமெரிக்காவில் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-6)

## வருடாந்த சிறுவர் தினம்

சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருவதற்கு இடங்கொடுங்கள்.... பரலோகராஜ்ஜியம் அப்படிப்பட்டவர்களுடையது.
மத். 19:14

காலம்: மார்கழி 13 ஆம் திகதி
நேரம்: பிற்பகல் 2-30
இடம்: இலங்கை பெந்தெகொஸ்தே சபை, புலோலி கிழக்கு, பருத்தித்துறை.

விசுவாசிகள் ஊழியர்கள் யாவரையும் அன்பாய் அழைக்கின்றோம்.

(சி-9812) தகவல்: சபையார்

## பெயர் மாற்ற அறிவித்தல்

இது வரை காலமும் புதிய தர்சன் பாணகம் எனும் பெயரில் இயங்கிய எமது பேக்கறி (12-12-94) இன்று முதல்

## நிவேதினி வெதுப்பகம்

எனும் புதிய பெயரில் தொடர்ந்து இயங்கும் என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம்.

உரிமையாளர்:
கா. பாஸ்கரன்

இல. 22, எழிலூர்,
கொழும்புத்துறை. (34158)

## 31ஆம் நாள் நினைவுகள்



ஊற்றாக: 27 — 11 — 1948
காற்றாக: 12 — 11 — 1994

உயர்திரு
**தம்பிராசா புவனேஸ்வரன்**
(பவா)
[பிரபல வர்த்தகர்]

திதி: 12 — 12 — 1994

பிரிவு என்பது இணைந்த உள்ளங்களை நெருப்பாக எரிக்கவல்லது. எமக்கு எல்லாமாக விளங்கிய எம் தலைவரே! உம்மை மறப்பதென்பது உலை நெருப்பை உடையாக்குவது போலத்தான்.

என்றும் நினைவுடன்;
மனைவி, பிள்ளைகள்.

டச் வீதி,
உடுவில். (34155)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 14 — 12 — 1911
மறைவு: 12 — 11 — 1994

திருமதி
**சிவசுப்ரமணியம் சிவபாக்கியம்**
(வங்களாவடி, வேலணை 5)

அன்பின் திருவுருவாய், பண்பின் பிறப்பிடமாய், பாசத்தின் சிகரமாய் வாழ்ந்து, எங்கள் அனைவருக்கும் நல்வழி காட்டிய எங்கள் அன்புத் தெய்வமே, நீங்கள் எம்மைவிட்டுத் திடீரெனப் பிரிந்து விட்டாலும், எங்கள் உணர்வு உள்ளவரை உங்கள் நினைவும் அன்பும் என்றும் எங்களை விட்டு நீங்காது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்:

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

27/11, ஈச்சமோட்டை வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். (34156)

## வலிகாமம் தெற்கு பிரதேசசபை – சுன்னாகம்
## 1995ஆம் ஆண்டிற்கான மாட்டிறைச்சிக் கடை ஆட்டிறைச்சிக் கடைகளுக்கான
# கேள்வி அறிவித்தல்

மேற்படி கேள்வியின் பொருட்டு, உதயன் பத்திரிகையில் 31-10-1994ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட கேள்வி நிபந்தனைகளுக்கு அமைவாக, கீழ்க்காணும் அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்களின்படி கேள்விகள் என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

1. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் இறுதித் திகதி: 1994-12-19 திங்கட்கிழமை பகல் 12-00 மணி வரை
2. கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி: 1994-12-20 செவ்வாய்க்கிழமை பகல் 12-00 மணி வரை
3. கேள்விகள் திறக்கப்படும் திகதி, 1994-12-20 செவ்வாய் கிழமை பிற்பகல் 2-00மணி வரை

| உப அலுவலகம் | குத்தகையின் தன்மை | கடையின் மாத வாடகை | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்பு பணம் | நிர்ணயிக்கப் பட்ட தொகை ரூபா ச. |
|---|---|---|---|---|---|
| சுன்னாகம் உப அலுவலகம் | | | | | |
| | 1. மாட்டிறைச்சிக் கடை | 100/- | 100/- | 2,000/- | 2,25,000-00 |
| | 2. ஆட்டிறைச்சிக் கடை | 100/- | 100/- | 2,000/- | 28,000-00 |
| உடுவில் உப அலுவலகம் | | | | | |
| | 1. இணுவில் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 50/- | 50/- | 500/- | 80,100-00 |

ஆ. மகாலிங்கம்,
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை.

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.
09-12-1994 (சி-5752)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## கிழக்கில் காட்டாட்சி!

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசாங்கப் படையினர் தமது சுற்றிவளைப்பு, தேடுதல், கைது நடவடிக்கைகளை இன்னும் தொடர்ந்து கொண்டே இருக்கிறார்கள். அங்கிருந்து கிடைக்கும் தகவல்களை நோக்கினால் சந்திரிகா அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் படையினர் தமது அடாவடித்தனங்களை அதிகரித்தும், தீவிரப்படுத்தியும் உள்ளதாகத் தெரிகிறது.

ஈழப்போர் இரண்டு 1990 ஜூன் மாதத்தில் தொடங்கிய ஆறு மாத காலத்திலேயே, கிழக்கில் இருந்து விடுதலைப் புலிகளை விரட்டி விட்டதாகவும், அங்குள்ள மூன்று மாவட்டங்களும் தமது பூரண கட்டுப்பாட்டில் வந்துவிட்டதாகவும் கூறியவர்கள் அரசாங்கப் படையினர்!

ஆனால், போர் ஆரம்பித்து நாலரை வருடங்கள் கழிந்த நிலையிலும் விடுதலைப் புலிகள் அப்பகுதியில் இருக்கிறார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் நாளாந்தம் தேடுதல், சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள்!

அவ்வேளைகளில் எல்லாம் தமிழ் மக்களுக்கு வேண்டாத தொல்லைகளைக் கொடுத்தும், இம்சித்தும் வருகிறார்கள். அப்பாவிகளான இளைஞர்களை மட்டுமன்றி, குடும்பஸ்தர்கள் மற்றும் வயதானவர்களையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்வதாகக் கூறிக் கூட்டிச் சென்று சிறிதும் மனிதநேயமின்றி சித்திரவதை செய்கிறார்கள்.

உள்ளூராட்சி, பொது, ஜனாதிபதித் தேர்தல்கள் என்று ஒரு வருடத்தில் மூன்று தேர்தல்கள் நடைபெற்று கிழக்கில் ஜனநாயகம் நிலவுவதாக வெளியே காட்டப்பட்டாலும், கிழக்கில் இராணுவ "ஆட்சியே" நடைபெறுகிறது. குறிப்பாகத் தமிழ் மக்கள் மீது, இராணுவ ஆதிக்கம் தட்டிக் கேட்பாரின்றித் தாராளமாகக் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

போரை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும்; இனப்பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு காணப்பட வேண்டும்; அமைதி நிலை நாட்டப்பட வேண்டும்;என்று அரசியல்வாதிகளும், மக்களும் ஒரு புறத்தில் அமர்க்களப்பட, மறு புறத்தில் இராணுவம் தன்பாட்டில் தமிழர்களைக் கொடுமைப் படுத்தி வருகிறது.

அரசாங்கமும், அமைச்சர்களும் மனித உரிமைகளைப் பேணுவதில் பெரு வேகமாகச் செயற்படப்போவதாகத் தெற்கில் சொல்லிக்கொண்டிருக்க,கிழக்கில் இராணுவமோ தான் நினைத்த மாதிரி, கண்மூடித்தனமாகத் தமிழ் மக்களின் சகல உரிமைகளையும் பறித்தெடுத்து வைத்துக் காலால் நசுக்குகிறது!

கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பில் சிறிய இடைவெளியில் இரண்டாவது முறையாகவும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு மக்கள் பெரும் பாதிப்புற்றுள்ளனர். இந்த வேளையிலும் கூட, இராணுவத்தினர் தமது சுற்றிவளைப்பையும் தேடுதலையும் நிறுத்தியதாக இல்லை.

மட்டக்களப்பு, களுவங்கேணியில் தேடுதல், சுற்றிவளைப்பு நடத்திய படையினர், மக்களைக் கைது செய்து கழுத்தளவு நீரில் நிற்கச் செய்து சித்திரவதை புரிந்திருக்கிறார்கள்! இது போன்ற இராணுவத்தின் பல கொடுமைகளை தொண்டர் நிறுவனம் ஒன்று அறிக்கையாகத் தயாரித்திருக்கிறது.

தமிழர்களின் உரிமைகளை வழங்குவதாகவும், நலன்களைப் பேணுவதாகவும், அரசாங்கம் ஒரு முனையிலும், அவர்களை அடக்கி, ஒடுக்கி, ஆதிக்கம் செய்வதில் இராணுவம் எதிர் முனையிலுமாக இருந்தால் சமாதானம், அமைதி என்பன எல்லாம் வெறும் ஏட்டுச் சுரைக்காயே!

ஜனநாயகம், மக்கள் ஆட்சி என்ற போர்வையில் காட்டாட்சி நடத்தப்பட்டால், தமிழர்கள் தமது விடுதலைப் போராட்டத்தை தீவிரப்படுத்தும் நிலையே தொடரும்.

எனவே, அரசாங்கம் கிழக்கில் நடக்கும் இராணுவ ஆதிக்கத்தைப் போக்குவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். இராணுவத்தின் காட்டாட்சியை நிறுத்த வேண்டும்.

பொ. ஐ. மு. அரசின்

# முதலாவது 'பட்ஜெட்' டில் 10 வீதம் துண்டு விழும்

### அமைச்சர் பீரிஸ் கூறுகிறார்

கொழும்பு, டிச. 12

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் முதலாவது வரவு செலவுத்திட்டத்தில் துண்டு விழும் தொகை பத்துச் சதவீதம் வரை அதிகரிக்கும் என்று அறிவிக்கப்படுகிறது.

நீதி அமைச்சரும் பிரதி நிதி அமைச்சருமான பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் இத்தகவலை வெளியிட்டார்.

அடுத்த ஆண்டு பெப்ரவரி 8ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ள இவ்வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகை 6சதவீதமாக இருக்கும் என்று முன்னர் எதிர்பார்க்கப்பட்டது.

### உப்பு விலை

தமிழீழ உப்பு உற்பத்தி நிறுவனத்தின் கழுவிய உப்பு ஒரு கிலோவின் மொத்த விலை 10 ரூபாவாகவும் சில்லறை விலை 12 ரூபா 50 சதமாகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாக வடபிராந்திய வணிகர் கழகங்களின் இணையம் அறிவித்துள்ளது.

இதே வேளை— தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காக அடுத்த வருடத்தில் இறக்குமதி மற்றும் விற்பனை வரிகளை அரசு அதிகரிக்க வேண்டியேற்படும் என்று வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-6)

# அரசியல் விஞ்ஞான ஆசிரியர் கருத்தரங்கு

### டிச. 23, 24, திகதிகளில்

கொழும்பு, டிச. 12

ஜி. சீ. ஈ. உயர்தர மாணவர்களுக்கு அரசறிவியல் — அரசியல் விஞ்ஞான பாடத்தினைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கும் பயிற்சிப் பட்டறையும் இம்மாதம் 23, 24ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழகப் பொருளியல் துறை மண்டபத்தில் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். விஞ்ஞான மன்றத்தின் சமூக விஞ்ஞான (டி) பகுதி இதனை நடத்துகின்றது.

அரசறிவியலில் சில அடிப்படைக் கோட்பாடுகள், இலங்கை அரசியலில் பரிணாம வளர்ச்சி, பொதுநிர்வாக இயல், சர்வதேச அரசியல் நடைமுறைகள் ஆகிய மூன்று பகுதிகளாக இக்கருத்தரங்கு நடைபெறும்.

ஜி. சீ. ஈ. உயர்தர வகுப்புகளில் அரசறிவியலை ஒரு பாடமாகக் கற்பிக்கும் எல்லா ஆசிரியர்களும் இக்கருத்தரங்கில் கலந்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகிறது.

இக்கருத்தரங்கில் பங்கு கொள்ள விரும்பும் ஆசிரியர்கள் இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன்பதாகத் தொடர்பு கொள்ள வேண்டும் என்று கோரப்பட்டுள்ளனர். (எ)

# ஆந்திராவில் ராமராவ் இன்று பதவியேற்பு

ஹைதரபாத், டிச. 12

ஆந்திரமாநில முதலமைச்சராக திரு. என். டி. ராமராவ் இன்று திங்கள் பதவி ஏற்கவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் நடந்து முடிந்த மாநில சட்டசபைத் தேர்தலில் திரு. ராமராவ் தலைமையிலான தெலுங்கு தேசம் கட்சி அமோக வெற்றியீட்டியது தெரிந்ததே.

சட்டசபையில் உள்ள 292 ஆசனங்களில் 206ஐத் தெலுங்கு தேசம் கைப்பற்றியது. இதுவரை ஆட்சியில் இருந்துவந்த இந்திரா காங்கிரஸினால் 23 ஆசனங்களை மட்டுமே கைப்பற்ற முடிந்தது.

இதேவேளை— புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட தெலுங்கு தேசம் கட்சி எம். எல். ஏக்கள் நேற்றுக்கூடி தங்களின் புதிய தலைவராக திரு. ராமராவை ஏகமனதாகத் தெரிவு செய்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

யாழ். கூட்டுறவு சமாசம்

# 11 கோடி ரூபாவுக்கு பொருள் கொள்வனவு

யாழ்ப்பாணம், டிச. 12

பொருளாதாரத் தடை, போக்குவரத்துத் தடை, இராணுவக் கெடுபிடிகள், கப்பல் வசதி இன்மை போன்ற பலசிரமங்களுக்கு மத்தியிலும் யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவு சமாசம் கடந்த மூன்று ஆண்டு காலப் பகுதியில் சுமார் 11 கோடி 8 லட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த பொருள்களை கொள்வனவு செய்து சங்கங்களுக்கும் தனியாருக்கும் சந்தைப்படுத்தியுள்ளது.

இதனால் பெறப்பட்ட இலாபப் பணம் 3 லட்சத்து 15 ஆயிரம் ரூபாவை அங்கத்துவ சங்கங்களுக்கு பகிர்ந்து வழங்கியுள்ளது.

மேற்படி சமாசம் 1992 முதல் 1994 ஆண்டு வரை தனது கொள்வனவு நடவடிக்கை சம்பந்தமாக வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமாசம் 1982ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட போதும் நாட்டின் சூழ்நிலை காரணமாக இயங்காதிருந்து மீண்டும் கூட்டுறவாளர்களின் முயற்சியினால் 1992ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் இயங்கி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (க-17)

# 3 விமானங்கள், 6 ஹெலிகள் வாங்கும் கேள்விப்பத்திர திகதி மேலும் நீடிப்பு

கொழும்பு, டிச. 12

விமானப்படைக்கு மூன்று போக்குவரத்து விமானங்களையும் ஆறு ஹெலிக்கொப்டர்களையும் கொள்வனவு செய்வது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு விடுத்த கேள்விப்பத்திர விண்ணப்ப முடிவு திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

இவ்விமானங்களையும் ஹெலிக்கொப்டர்களையும் விற்க விரும்பும் ஆயுத விற்பனையாளர்கள் தங்கள் கேள்விப்பத்திரங்களை இம்மாதம் 22ஆம் திகதி வரை சமர்ப்பிக்கலாம் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

முன்னர் வெளியிடப்பட்ட கேள்விப்பத்திர அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவு திகதி டிசம்பர் 2 என்று குறிப்பிடப்பட்டிருந்தது. முந்திய விளம்பரத்தில் குறிப்பிட்ட ரக விமானங்களையும் ஹெலிகளையும் விற்பனை செய்பவர்களே கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம் என்று நிபந்தனை போடப்பட்டிருந்தது.

இது முன்னணி அரசினால் ரத்துச்செய்யப்பட்ட ரஷ்ய ஆயுதக்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் ஆயுதங்களை விற்பனை செய்து வந்த ரஷ்ய நிறுவனத்திடம் இருந்து விமானங்களையும் ஹெலிகளையும் வாங்குவதற்கு பாதுகாப்பு அமைச்சில் பணிபுரியும் சில செல்வாக்கு உள்ள பிரமுகர்கள் மேற்கொண்ட முயற்சி என்ற குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது.

அதனை அடுத்தே புதிய கேள்விப்பத்திர அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி ஏ. என். 32 பி. ரக போக்குவரத்து விமானங்கள், மிக் ஹெலிக்கொப்டர்கள் அல்லது இவற்றை ஒத்த தான விமானங்களையும் ஹெலிக்கொப்டர்களையும் விற்கக்கூடிய நிறுவனங்களும் கேள்விப்பத்திரங்களை சமர்ப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-எ)

## பாப்பரசர் விஜய சிறப்பு நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், டிச. 12

பாப்பாண்டவர் 2ம்அருளப்பர் சின்னப்பரின் இலங்கைவிஜயம் குறித்த சிறப்பு நிகழ்ச்சி ஒன்று இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் ஒலிபரப்பாக உள்ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இரவு 9.30 மணிக்கு இந்தச் சிறப்பு நிகழ்ச்சி ஒலிபரப்பாக உள்ளது. இந்நிகழ்ச்சியில் தமிழீழ மறை மாவட்டங்களின் ஆயர்கள் கலந்து கொண்டு சிறப்புரைகள் ஆற்றுவர்.

பாப்பரசரின் விஜயத்தை முன்னிட்டு சிங்களம்' ஆங்கில சேவைகளிலும் சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறும். (அ)

## முகமாலையில் திருடர் தொல்லை

பளை முகமாலைப் பகுதியில் இரவில் திருடர்களின் தொல்லை அதிகரித்து வருகிறது. இரவு வேளைகளில் இப் பகுதியில் உள்ள வளவுகளுக்குள் புகுந்து வீட்டின் வெளியில் காணப்படும் குடங்கள், பாத்திரங்கள் மண்வெட்டிகள், கோடரிகளை எடுத்துச் செல்கின்றனர் அந்தத் திருடர்கள். (ஓ-117)

## புலிகளின் குரல் வானொலியில்

**12 — 12 — 1994**

**திங்கள் இரவு**

★ 8-01 — தளிர்கள்—சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
★ 8-20 — தாயகப்பாடல்கள்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — தரிசனம் — நிகழ்ச்சியில் மூத்த ஹார்மோனியக் கலைஞர் திரு. முருகேசு — சோமசுந்தரம் அவர்களுடனான செவ்வி. செவ்வி காண்பவர் — சத்யா
★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

**13 — 12 — 1994**

**செவ்வாய் காலை**

★ 7-02 — மாவீர வணக்கம்.
★ 7-15 — இன்றைய தாரகை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்.
★ 7-40 — தாயகப்பாடல்கள்
★ 8-00 — மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

## ஆலயங்களில்

நவாலி அட்டகிரி சிவன் கோவிலில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நவோத்திர சங்காபிஷேகம், தீபாராதனை, பஞ்சமுக அர்ச்சனை ஆகியன நடைபெற்று பெருமானின் வீதியுலா இடம்பெறும். (க)

## விசேட மாணவர் முத்திரை

யாழ்ப்பாணம், டிச 12

வலி- கிழக்குப் பிரிவில் இடம் பெயர்ந்த குடும்பங்களில் உள்ள பாடசாலை செல்லும் மாணவர்களுக்கும், மாதம் 700/- ரூபாவிற்கு மேற்பட்ட வருமானமுடைய குடும்பங்களில் உள்ள பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்குமான விசேட மாணவர் முத்திரை வழங்குவதற்கான விண்ணப்பங்கள் தற்பொழுது சம்பந்தப்பட்ட கிராம உத்தியோத்தர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுவரை விண்ணப்பிக்காதோர் 14 - 12 - 94 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கும்படி கோப்பாய் பிரதேச செயலர் கேட்டுக் கொள்கின்றார். (எ)

## தேயிலை தோட்டங்களில் காய்கறிச் செய்கை

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள பல தேயிலைத் தோட்டங்களில் காணிகள் தனியார் விவசாயிகளுக்கு 2, 3 வருடக் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நட்டத்தில் இயங்குவதாகக் கூறப்படும் தேயிலைத் தோட்டங்களில் உள்ள காணிகளே இப்படி கொடுக்கப்படுவதாகவும் இக்காணிகளில் காய்கறிப் பயிர்கள் உற்பத்தி செய்யப்படுவதால் தோட்ட நிர்வாகங்கள் தேயிலை உற்பத்தியில் எதிர்காலத்தில் ஆர்வம் காட்டுமா என்ற சந்தேகம் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தேயிலைத் தோட்டங்களை தனியார் நிறுவனங்கள் பொறுப்பேற்ற பின்னர் தோட்டத் தொழிலாளர்களின் வேலை நாட்கள் குறைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (எ)

யாழ். தொழில் நுட்பக் கல்லூரி

# ஒரு கோடி ரூபா செலவில் அபிவிருத்தி வேலைகள்

### அமைச்சருடன் நாளை சந்திப்பு

பல லட்சம் ரூபா செலவில் யாழ். தொழில் நுட்பக் கல்லூரியை அபிவிருத்தி செய்வதற்கு தொழில் நுட்பக் கல்லூரிகள் பணிப்பாளர் நாயகம் இணக்கம் தெரிவித்துள்ளார் என்று அறியவருகிறது.

யாழ். தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் அவைப் பிரதிநிதிகள் குழுவிடம் பணிப்பாளர் நாயகம் இது தொடர்பான உறுதிமொழியை வழங்கினார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இச்சந்திப்பு கொழும்பில் பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்றது.

தொழில்நுட்பக் கல்லூரிக்குத் தேவையான இயந்திரங்கள் மற்றும் கருவிகளை வாங்குவதற்கு 50 லட்சம் ரூபா, புதிய கட்டடங்களைக் கட்ட 50 லட்சம் ரூபா மற்றும் கட்டடத் திருத்த வேலைகளுக்கு 20 லட்சம் ரூபா ஆகியவற்றை வழங்கவும் பேச்சுவார்த்தையின் போது பணிப்பாளர் நாயகம் சம்மதம் தெரிவித்தார் என்றும் அறிவிக்கப்படுகிறது.

இந்த நிதி ஒதுக்கீடுகள் தொடர்பாக அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெறும் முயற்சியில் மாணவர் அவை ஈடுபட்டுள்ளது. இது குறித்து மாணவர் அவைப் பிரதிநிதிகள் குழு தொழில், தொழிற் பயிற்சி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷாவை நாளை செவ்வாய்க்கிழமை சந்தித்துப் பேச்சுகள் நடத்தத்திட்டமிட்டுள்ளது. யாழ். தொழில் நுட்பக் கல்லூரியின் தேவைகள் பற்றியும் அமைச்சரிடம் அப்போது தெரிவிக்கப்படும்.

இதேவேளை — கல்லூரியின் தேவைகள் குறித்து 21 கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை மாணவர் அவை ஜனாதிபதி, பிரதமர், கல்வி அமைச்சர், தொழில், தொழிற் பயிற்சி அமைச்சர், வெளிவிவகார அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ளது. (எ-4)

# யாழ். பல்கலைக்கழகத்தின் எதிர்காலத் திட்டங்கள்

### விவரம் கோரப்படுகிறது

யாழ்ப்பாணம்,டிச. 12

யாழ். பல்கலைக்கழகத்தில் அடுத்த மூன்று ஆண்டுகள் மேற்கொள்ளத்திட்டமிடப்படும் அபிவிருத்தி திட்டங்கள் குறித்த விவரங்களை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு கேட்டுள்ளது.

உத்தேச கட்டட வேலைகள், ஆரம்பிக்க வேண்டிய துறைகள், தேவையான ஆளணிகள் குறித்த விவரங்களையும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு கேட்டுள்ளது.

இவ்விவரங்களை அனுப்பும் வேலை தற்சமயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# யாழ். பல்கலைக் கழகத்தில் கடற்றொழில் பீடம்

### நோர்வே குழு வருகிறது

யாழ். பல்கலைக்கழகத்தில் கடற்றொழில் பீடத்தை ஆரம்பிக்கும் சாத்தியம் குறித்து ஆராய நோர்வே தொம்சோ பல்கலைக்கழக அதிகாரிகள்குழுஒன்று யாழ்ப்பாணம் வரவிருக்கின்றது என்று தெரியவருகிறது.

யாழ். பல்கலைக்கழகத்தில் கடற்றொழில் பீடத்தை ஆரம்பிப்பதற்கு தேவையான உதவிகளை வழங்குவதற்கு யாழ் பல்கலைக்கழகத்துக்கும், நோர்வே தொம்சோ பல்கலைக்கழகத்துக்கும்இடையில் கடந்த வருடம் உடன்பாடு ஒன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது.

கடற்றொழில் பீடத்தை ஆரம்பிப்பதற்கான நிதி உதவியையும், தொழில் நுட்ப ஆலோசனைகளையும் அந்த பல்கலைக்கழகம் வழங்க இணங்கியிருந்தது. (எ-3)

# நீதிவான் நீதி மன்றிலும் மனிதஉரிமை மீறல் வழக்கு

கொழும்பு, டிச. 12

மனித உரிமை மீறல் சம்பவங்களினால் பாதிக்கப்பட்டவர்கள் நீதிவான் நீதிமன்றங்களிலும் வழக்குத் தாக்கல் செய்து நிவாரணம் பெறக் கூடியதாக அரசமைப்பில் திருத்தம் செய்யப்படவுள்ளது.

இத்தகவலை அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் வெளியிட்டார்.

மனித உரிமை மீறலுக்கு ஆளானவர்கள் தற்போது உயர் நீதிமன்றத்துக்கு விண்ணப்பித்தே நிவாரணம் பெற முடியும்.

புதிய அரசமைப்பின் கீழ் உயர்நீதிமன்றத்தில் மட்டுமல்லாது நீதிவான் நீதிமன்றங்களிலும் மனித உரிமை மீறல்கள் குறித்து பாதிக்கப்பட்டவர்கள் வழக்குத் தாக்கல் செய்து நிவாரணம் பெற வழி ஏற்படும் என்றும் அவர் கூறினார். (எ-க-4)

# குமண கப்பலை மீண்டும் சேவையில் அமர்த்த முடிவு

யாழ். மாவட்டத்தில் பொருள்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டையடுத்து 'குமண' கப்பலை மீண்டும் சேவையில் ஈடுபடுத்த யாழ். செயலகம் முடிவு செய்துள்ளது.

யாழ். மாவட்டத்துக்கான அத்தியாவசியப் பொருள்களை எடுத்து வரும் பணியில் மூன்று வருடங்களுக்கு மேலாக சேவையில் ஈடுபட்ட இக்கப்பல் சேவை கடந்த வருடம் நிறுத்தப்பட்டிருந்தது.

யாழ். மாவட்டத்துக்கான பொருள்களை ஏற்றிவர முன்னாள் அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் இக்கப்பலை வாடகைக்கு அமர்த்தியிருந்தார்.

யாழ் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள பொருள் தட்டுப்பாட்டையடுத்து இக்கப்பலை தொடர்ந்து சேவையில் ஈடுபடுத்தி பொருள்களை எடுத்து வர முடிவு செய்யப்பட்டுள்ளது. (இ-3)

**தண்ணீரை கடலில் செல்லவிடாமலே-நாம் நன்னீரை நிலத்தின்கீழ் சேமித்திடுவோம்**

## எரிபொருள் இன்றி ஜெனரேற்றர்

சாவகச்சேரி, பளை மற்றும் மருதங்கேணி வைத்திய சாலைகளுக்கு ஜெனரேற்றர்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

எனினும் — அவற்றை இயக்குவதற்குத் தேவையான எரிபொருள் வழங்கப்படவில்லை.

இதனால் அவற்றைஇயக்கி பயனடைய முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ-117)

## சாரணத் தலைவர் பயிற்சிக் கூட்டம்

சாரணத்தலைவர்களும் குருளைச்சாரணத்தலைவர்களும் அதிஉயர் பயிற்சியான தருசின்னப்பயிற்சி பெறுவதற்கான கூட்டம் கொக்குவில் இந்துக்கல்லூரியில் இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறும்.

இக்கூட்டத்தில் ஆதாரப் பயிற்சி இரண்டு முடித்துள்ள சாரணத்தலைவர்கள் அனைவரையும் பங்குபற்றுமாறு யாழ். மாவட்ட சாரண ஆணையாளர், திரு. இ. மகேந்திரன் கேட்டுள்ளார்.

## கல்விக் கழக ஆசிரியருக்கு கொடுப்பனவு

யாழ்ப்பாணம், டிச. 12

கல்வி மேம்பாட்டுக் கழக ஆசிரியர்களுக்கான மாதாந்த உதவு தொகைக் கொடுப்பனவுகள் நாளை முதல் கோட்டக் கல்வி அலுவலகங்களில் பின்வரும் ஒழுங்கில் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சிக் கோட்டம் —நாளை காலை 9மணி.

சண்டிலிப்பாய், தெல்லிப்பளை கோட்டம்— நாளை மறுதினம் புதன் கிழமை காலை 9மணி.

சங்கானை கோட்டம் — எதிர்வரும் வியாழக்கிழமை காலை 9மணி

உடுவில் கோட்டம்—எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9மணி.

கோப்பாய் கோட்டம் — எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணி

சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் அனைவரும் தத்தமது பாடசாலை அதிபர்களினால் உறுதிப்படுத்தப்பட்ட உதவு தொகைப் பட்டியலை பெற்று வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம் நாவலர்வீதி புதிய கல்வி நிலைய பரிசளிப்பு விழா எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2. 00 மணிக்கு நாவலர் மண்டபத்தில் நடைபெறும்.

புதய கல்வி நிலையத்தில் கல்வி பயின்று புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கு அன்று பரிசில் வழங்கப்படும்.

## போசாக்கு கருத்தரங்கு

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில், போசாக்கு குறைந்த முற்பாடசாலை செல்லாத பாலரின் பெற்றோர்களுக்கும், கர்ப்பிணித் தாய்மார்களுக்குமான கருத்தரங்கு ஒன்று கடந்த சனிக்கிழமை அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த பாடசாலையில் நடைபெற்றது.

சங்கானை பிரதேச செயலர் திரு.கா.சந்திரராசா இக் கருத்தரங்கில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (க)

## பொறி வெடியில் சிக்கி ஒருவர் காயம்

மிருக வேட்டைக்காக கட்டப்பட்டிருந்த பொறிவெடியில் சிக்குண்டு ஒருவர் படுகாயமடைந்தார்.

உடையார் கட்டில் கடந்த வியாழன் இடம்பெற்ற இச் சம்பவத்தில் விசுவமடு பிரமந்தராயன் ஆற்றைச் சேர்ந்த சிவரத்தினம் ஞானேந்திர செல்வம் (வயது 30) என்பவரே காயமடைந்தவராவார்.

காட்டுக்கு வேட்டையாடச் சென்ற சமயமே பொறிவெடியில் இவர் சிக்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## ஏரம்பு வேலுப்பிள்ளை

மண்டைதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகக் கொண்டிருந்தவருமான ஏரம்பு வேலுப்பிள்ளை நேற்று காலமாகிவிட்டார்.

அன்னார் சின்னம்மாவின் அன்புக் கணவரும், செல்வரத்தினம் [பிரான்ஸ்], யோகரஞ்சிதம் [U. K], செல்வரஞ்சிதம் [கற்றன்], காந்தகுமார் [கனடா], கலாரஞ்சிதம் [U. K.], சுதாகரன் [குகன்] ஆகியோரின் அன்புத் தந்தையும், பரமேஸ்வரி, மாணிக்கவாசகர் [U. K.], கிருஷ்ணகுமார் [ஓமான்], ஸ்ரீரஞ்சனி [கனடா] ஆகியோரின் மாமனாரும், கார்த்திகேசு, சோதிலிங்கம், பெரியநாயகி, திருநாவுக்கரசு, காலஞ்சென்ற சிதம்பரநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 12-12-94 திங்கட்கிழமை பி. ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, கொக்குவில் இந்து மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**பிள்ளைகள், மருமக்கள்**

கோணாமலை லேன்,
கொக்குவில் கிழக்கு. [34159]

## காத்தியேசு வல்லிபுரம்

உரும்பிராய் மேற்கைச் சேர்ந்த, காத்தியேசு வல்லிபுரம் [உரும்பிராய்-வசாவிளான் மண்எண்ணெய் விற்பனை நிலையங்களின் உரிமையாளர்] நேற்றுக் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற தங்கச்சியம்மாவின் அன்புக் கணவரும், இராசலிங்கம், சிவலிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 12-12-94 திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் 32, பூமகள் வீதி, அரியாலை மேற்கு இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**வ. இராசலிங்கம்**
(மகன்)

32, பூமகள் வீதி,
அரியாலை மேற்கு. [34157]

## முத்தையா சிவஞானம்
### [நீதிமன்ற ஊழியர் — மல்லாகம்]

பருத்தித்துறை கற்கோவளத்தைப் பிறப்பிடமாகவும் காங்கேசன்துறையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த முத்தையா சிவஞானம் நேற்றுச் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகப்பர் முத்தையா பார்வதி தம்பதிகளின் அன்பு மகனும், சத்தியபாமாவின் அன்புக் கணவரும், விஜிதரின் அன்புத் தந்தையும், இரட்ணராஜா (கப்ரின்), ஆனந்தா (கனடா, முன்னைநாள் பெருந்தெருக்கள் திணைக்கள லிகிதர்), விஜயலட்சுமி, சரோஜினிதேவி (அமெரிக்கா), இந்திராணி ஆகியோரின் சகோதரரும், பரமயோகராஜசிங்கம், சிவபாலா, சந்திரரட்ணம், கனகநாயகம் (அமெரிக்கா), முன்னைநாள் கிராம அலுவலர் — காங்கேசன்துறை), அருமைநாயகம் (கிராம அலுவலர்—காங்கேசன்துறை தெற்கு) ஆகியோரின் மைத்துனரும், அனிதாவின் சிறியதகப்பனாரும், பிரபாவதி, பிரியதர்சினி, சோபிகா, பிரிந்தன், பிரியந்தன், சுஜிந்தர் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் 12-12-94 (திங்கட்கிழமை) பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**இ. மு. அருமைநாயகம்**
(மைத்துனர்)
கிராம அலுவலர்
காங்கேசன்துறை தெற்கு.

மலர்வாசா,
சுதுமலை மத்தி,
மானிப்பாய். (34161)

## திருமதி
## வரப்பிரகாசம் மோட்சலங்காரம்

சுன்னாகத்தைச் சேர்ந்த திருமதி வரப்பிரகாசம் மோட்சலங்காரம் நேற்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கிறிஸ்ரோ வரப்பிரகாசத்தின் [வரப்பிரகாசம் சன்ஸ் புடைவை மாளிகை, திருகோணமலை] அன்பு மனைவியும், திருமதி கிறிஸ்ரோ நட்சத்திரம், காலஞ்சென்றவர்களான அந்தோனி, சந்தியாப்பிள்ளை, அருட்சகோதரர் சின்னப்பர் [செபமாலைத்தாசர் சபை], திருமதி மரியாம்பிள்ளை ஆனந்தம், மரியாம்பிள்ளை, கிறிஸ்ரோ ஆகியோரின் சகோதரியும், திருமதி அருளப்பன் நீற்றம்மா, பெனடிக்ற், ஜோசப், திருமதி யாகப்பர் சுகிர்தலங்காரம், திருமதி சாந்தப்பர் அஞ்சலீனா, செல்வரத்தினம், கிறிஸ்தோப்பர் இராசநாயகம் ஆகியோரின் அன்புத் தாயாரும், வைத்திய கலாநிதி அருளப்பன், திருமதி பெனடிக்ற் மங்களேஸ்வரி, திருமதி ஜோசப் மரியகொறற்றி, காலஞ்சென்ற பிலிப் யாகப்பர் [ஆசிரியர்], திருமதி செல்வரத்தினம் மேரி அன்னம்மா, திருமதி கிறிஸ்தோப்பர் இராசநாயகம் சுதா, சாந்தப்பர் [செயலாளர் மாகாண சபை, திருகோணமலை], ஜோசப் [ஆசிரியர், மல்லாகம் ம. வி] ஆகியோரின் மாமியாரும், பிரான்சிஸ் சேவியர் P. H. D [ஹொலண்ட்], அருட்சகோதரி மேரி பிரான்சிஸ்கா [செபமாலைத்தாசர் சபை], திருமதி ஜோசப் திரேஸ் அன்ரனிற்றா [ஆயுள்வேத வைத்தியர்], மரியகொறற்றி, அன்ரன் கிறேஷியன் [ஆசிரியர் ஸ்கந்தவரோதயக் கல்லூரி], அன்ரன் அனஸ்ரீன் [யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ முதலாம் வருட மாணவன்], அமலசபீனா, யூட் குயின்ரஸ் [புனித மாட்டீன் குருமட மாணவன்], கிறிஸ்ரியஸ்ரஸ், அல்வின், பெர்னாண்டோ, பிறேமகாந்தன், பிரியதர்ஷினி, பிலிப், மடோனா, றெமோனா, சாம்சன், கஷில்டா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று [12 - 12 - 94] திங்கள் பிற்பகல் 3 மணிக்கு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் வைக்கப்பட்டு இரங்கற் திருப்பலியின் பின் சுன்னாகம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
வரப்பிரகாசம் பெனடிக்ற் (மகன்)

புனித அந்தோனியார் வீதி,
சுன்னாகம். [34160]

# ஆசிரியர் இடமாற்றச் சபைகளில் தொழிற்சங்கப் பிரதிநிதிகள்

## ஜூலையிலிருந்து புதிய திட்டம் அமுல்

ஆசிரியர் இடமாற்றச் சபைகளில் ஆசிரியர் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளும் நியமனம் பெற உள்ளனர்.

அடுத்த வருடம் ஜனவரியில் இருந்து அமுலுக்கு வரும் வருடாந்த ஆசிரியர் இடமாற்றத்தில் ஆசிரியர் தொழிற்சங்கங்களின் கருத்துக்களும் யோசனைகளும் பெறப்படும் என்று கல்வி உயர்கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான பணிப்புரை மாகாண செயலாளர்களுக்கும் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அமைச்சரினால் வழங்கப்பட்டுள்ளது என்று அரசாங்க சேவைக் கமிஷனில் உள்ள கல்விச் சேவைகள் கமிட்டித் தலைவர் திரு. ஜோர்ஜ் மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

மூன்று வருடங்களுக்குமேல் கஷ்டப் பிரதேசங்களில் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கும்—

தமது சொந்த இடங்களில் இருந்து நீண்ட காலமாக வெளியூர்களில் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கும்— இடமாற்றத்தின் போது முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் திரு. மெண்டிஸ் கூறினார்.

நாட்டில் உள்ள தேசிய பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு தனியான இடமாற்றுத் திட்டம் ஒன்று உண்டு. இப்பாடசாலைகளில் உள்ள வெற்றிடங்களுக்கு கடந்த ஒக்ரோபரில் விளம்பரம் செய்யப்பட்டது.

இந்த இடமாற்ற விண்ணப்பங்களை கவனிப்பதற்கு மாகாண கல்விப்பணிப்பாளர் தலைமையில் விசேட சபை ஒன்றும் நியமிக்கப்பட்டது.

தேசிய பாடசாலைகளில் படிப்பிப்பதற்கு ஏராளமானோர் விண்ணப்பித்துள்ளனர்.

நாட்டில் உள்ள 160 தேசிய பாடசாலைகளிலும் படிப்பிப்பதற்கு 5000க்கு மேற்பட்டோர் இடமாற்றம் கோரி விண்ணப்பித்துள்ளனர்.

இவ்வாறு திரு. மெண்டிஸ் மேலும் கூறினார். (இ)

## தமது 65 ஆவது வயதில் அப்பாவாகிறார் அரபாத்!

ஜெருசலேம், டிச. 12

பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யசீர் அரபாத் விரைவில் தந்தையாகப் போகிறார்.

65 வயதான அரபாத்தின் 29 வயதான மனைவி சுஹா தற்போது கர்ப்பிணியாக இருக்கிறார்.

இஸ்ரேலிய வானொலியின் அராபிய மொழி சேவைக்கு கடந்த வியாழனன்று அளித்த பேட்டியில் சுஹா இத்தகவலைத் தெரிவித்தார்.

ஜசீர் அரபாத்தும் சுஹாவும் 89 ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டனர். (ஐ)

### கார் விபத்தில் சிக்கிய
## ஜெயில் சிங்கின் உடல்நிலை மோசமடைந்து வருகின்றது

புதுடில்லி, டிச. 12

கார் விபத்து ஒன்றில் சிக்கி படுகாயமடைந்த இந்திய முன்னாள் ஜனாதிபதி ஜெயில் சிங்கின் உடல்நிலை நாளுக்கு நாள் மோசமடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜெயில் சிங் தற்போது சண்டிகர் ஆஸ்பத்திரி ஒன்றில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

அவருக்கு சிகிச்சை அளித்து வரும் டாக்டர்கள் நேற்று வெளியிட்ட அறிக்கையின்படி அவரது மூளை, கல்லீரல் ஆகியன நன்கு செயல்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிது.

எனினும் அவர் மயக்க நிலையிலேயே இருந்து வருகிறார்.

இதற்கிடையில் —

ஜெயில்சிங் பயணஞ் செய்த கார் விபத்துக்குள்ளான சம்பவம் பற்றி பூரணவிசாரணை நடத்தும்படி பஞ்சாப் மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

## சொத்தி உபாலிக்கு தொடர்ந்து விளக்கமறியல்

பிரபல ''பாதாள உலக''க் குழு ஒன்றின் தலைவரான சொத்தி உபாலியை அடுத்த மாதம் 7ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி மாத்தளை பிரதம நீதிவான் உத்தரவிட்டார்.

மாத்தளை மாநகரசபையின் ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினரான ரஸ்மார் ஹுசேனின் படுகொலை தொடர்பாக சொத்தி உபாலியும் வேறு எட்டுப் பேரும் கைது செய்யப்பட்டுள்ளமை தெரிந்ததே.

இக்கொலை தொடர்பாக முன்னாள் ஐ.தே.க அமைச்சர் ஒருவரின் வாக்குமூலத்தைப் பெற வேண்டியுள்ளது என்றும் அதுவரை சந்தேக நபர்களை விளக்கமறியலில் தொடர்ந்து வைக்கும்படியும் பொலீஸார் விண்ணப்பித்திருந்தனர்.

சொத்தி உபாலி முன்னாள் அமைச்சர் சிறிசேன குரேயின் நெருங்கிய சகா என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

### புதிய அரசமைப்பில்
## அவசர கால நிலையிலும் மனித உரிமை பேணப்படும்
### அமைச்சர் பீரிஸ் விளக்கம்

கொழும்பு, டிச. 12

அவசரகாலச் சட்டம் அமுலில் இருக்கும் போதும் மனித உரிமைகள் பேணப்படுவதை உறுதிப்படுத்துவதாக புதிய அரசமைப்பு இருக்கும்.

நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் முன்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

மனித உரிமைகள்தினத்தை ஒட்டி, பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மனித உரிமைகள் அபிவிருத்தி பற்றிய சட்டத்தரணிகள் சங்கம் இந்த நிகழ்ச்சியை ஒழுங்கு செய்திருந்தது.

அந்த அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு நாடாளுமன்றத்துக்கும் கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்படும்.

அவசரக் காலச் சட்டம் அமுலில் இருக்கும் போது கூட மனித உரிமைகள் பாதுகாக்கப்படும்.

அவசர காலச் சட்டத்தின் கீழ் அரசாங்கம் எடுக்கும் தீர்மானங்கள் நியாயமானவைதானா என்பது பற்றி தீர்மானிக்கும் அதிகாரங்கள் நீதித்துறைக்கு வழங்கப்படும்.

முக்கியமான கால கட்டங்களின் போது அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகள் பற்றித் தேவையான செயல்பாடுகளை நீதித்துறை மேற்கொள்ளும்.

இராணுவமும் பொலீஸும் சட்டத்துக்கு அப்பாற்பட்டுச் செயல்படக் கூடா.

மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு உதவும் புதிய அரசமைப்பை அறிமுகப்படுத்துவதே அரசின் [illegible] அமைச்சர் தெரிவித்தார் (எ 4)

**தற்போதைய...**
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
பார்க்கவில்லை.

''எத்தகைய இடையூறுகள் வந்தாலும் தற்போதைய சமாதான முயற்சிகளை நிறுத்த மாட்டோம். ஒரு நிரந்தர சமாதானத்தையே ஏற்படுத்தும் வகையில் நாட்டு மக்கள் எனக்கு ஆணையிட்டுள்ளனர்.

எமது சமாதான முயற்சிகள் நல்ல பலனளிக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

''வடக்கு — கிழக்கு மக்கள் ஒரு உறுதியான சமாதானத்தை எதிர்பார்க்கின்றனர். இந்த நிலையில் சமாதானத்தை ஏற்படுத்துவது என்பதில் அரசாங்கம் உறுதியாக விருக்கிறது''— என்றும் அவர் கூறினார். (உ-எ)

**செயலகப்...**
[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
யாற்றுவார்.

யாழ். மாவட்டத்தில் —

முன்னைய அரச அதிபர் மேற்கொண்ட பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். அவற்றில் எவ்வித மாற்றமும் இருக்காது.

ஏற்கனவே திட்டமிடப்பட்டுள்ள பணிகளை தடங்கலின்றிச் செயற்படுத்தவும் சகலவிதமான [illegible] மேற்கொள்ளப்படும் — என்றும் திரு. [illegible] தெரிவித்தார். (அ-3-4)

**கணித பாட...**
[1ஆம் பக்கத் தொடர்ச்சி]
பரீட்சை நிலையத்தில் மேற்பார்வையாளராகக் கடமையாற்றியவர் அப்பொறுப்பிலிருந்து உடனடியாக விலக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் பொதுவாக பரீட்சையை பாதிக்க மாட்டாது என்று பரீட்சை ஆணையாளர் நாயகம் ஆதர் வெதமுல்ல தெரிவித்துள்ளார்.

இதேவேளை —

ஜி. சீ. ஈ. (சாதாரண தரப்) பரீட்சையில் ஆள் மாறாட்டம் செய்த ஒருவரை நித்தம்புவ பொலீஸார் கைது செய்துள்ளனர்.

ஊரப்பொல மகா வித்தியாலயத்தில் விஞ்ஞான பாட பரீட்சையில் ஆள்மாறாட்டம் செய்த ஜி. சீ. ஈ. (உயர்தர) வகுப்பு மாணவன் ஒருவன் கைது செய்யப்பட்டான். (உ-3)

**சமாதான...**
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
காணுவதில் அவர்கள் கொண்டுள்ள பெரு விருப்பத்தை சம்பந்தப்பட்டவர்களுக்கு தம்மால் தெரியப்படுத்த முடியும் என்றும் பி. பி. ஸி. சிங்கள சேவை பதிலளித்துள்ளது.

புதிய அரசு இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வை காணும் என்ற நம்பிக்கையை தாம் இன்னமும் கொண்டுள்ளதாகவும் ஆயினும் அது அரசுக்கு மிகவும் சவாலான ஒரு விடயமாகும் என்றும்— எவ்வாறாயினும் சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிக்க வேண்டியது அரசின் கடமை என்றும் ''சந்தேசய'' நேயர்கள் தமது கடிதங்களில் குறிப்பிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

**ராவ் பதவி...**
( 1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
மாநிலங்களுக்கான சட்டசபைத் தேர்தல்களில் இந்திரா காங்கிரஸ் படுதோல்வி அடைந்திருப்பது மத்திய அரசின் கொள்கைகளை மக்கள் நிராகரித்து விட்டனர் என்பதையே எடுத்துக் காட்டுவதாகவும் அவர் தெரிவித்தார். (எ)

**நாடாளுமன்ற...**
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
அரசிடம் அரசாங்கத்தைக் கையளித்து விட்டு, பொதுத் தேர்தல் ஒன்று நடத்த வேண்டும் என்று கோரியே இத்தலைவர்களும் அவர்களது கட்சிகளும் நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரித்து வருகின்றன. (உ)

**மாவட்ட...**
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
வாக்கப்படும்.

யாழ். மாவட்ட மக்களின் தேவைகள், மாவட்ட அபிவிருத்தி போன்றவை பிரதேச செயலர்களைக் கொண்ட ''அமைச்சரவை'' ஊடாகச் செயற்படுத்தப்படும்.

யாழ். மாவட்ட மக்களின் பிரச்சினைகள் குறித்து மாதாந்தக் கூட்டங்கள் நடத்தி ஆராயப்படும். தேவை ஏற்படும்பட்சத்தில் உடனுக்குடன் அவசரக் கூட்டங்களும் நடத்தப்படும். அந்தக் கூட்டங்களில் எடுக்கப்படும் முடிவுகள் மக்களுக்கும் அறிவிக்கப்படும்—என்றும் அரச அதிபர் தெரிவித்தார். (அ-3-4)

## சேசேனியா மாநிலம் மீது ரஷ்யா படையெடுப்பு!

ரஷ்யாவிலிருந்து பிரிந்து சென்று தனிக்குடியரசாகப் பிரகடனம் செய்திருக்கும் சேசேனியா மாநிலத்துக்குள் ரஷ்யப் படைகள் ஊடுருவத் தொடங்கியிருக்கின்றன.

ரஷ்யாவின் கவச வாகன படை அணிகள் சேசேனிய தலைநகரான குறோஸ்மியை நோக்கி மூன்று திசைகளில் முன்னேறி வருவதாக அறிவிக்கப்படுகிறது.

தமது மக்கள் தமது நாட்டைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள் என சேசேனிய தலைவர் ஜெனரல் டுடயேவ் தெரிவித்தார்.

படை எடுப்பால் ஏற்படும் விளைவுகளுக்கு மொஸ்கோ அரசே பொறுப்பேற்க வேண்டி நேரிடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

பெரும்பாலும் முஸ்லிம்களைக் கொண்ட — பத்து லட்சம் மக்கள் தொகையுடன் கூடிய — சேசேனியா, ரஷ்யாவின் ஆட்சியின் கீழ் இருக்க மறுத்துவிட்டபின்னர் இந்தப் பிரச்சினை எழுந்துள்ளது. (உ)

## வதிவிட வேளாண் போட்டி பொருண்மியம் நடத்தும்!

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தமிழீழ குடிமகன் ஒவ்வொருவரும் தனது பொருண்மிய சுமையில் இருந்து விடுபட பல்வேறு செயல் திட்டங்களை செய்து வருகின்றது. அந்த வகையில் வதிவிட வேளாண்மையில் ஈடுபாடுள்ள மக்களை ஊக்குவிக்கும் முகமாக வழக்கம் போல இம்முறையும் 1994 - 95 காலப்பகுதிக்குரிய வதிவிட வேளாண்மைப் போட்டி ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என அறிவிக்கப்படுகிறது.

ஆர்வமுள்ளோர் 15-01-95 திகதிக்கு முன்னர் கிராமிய உற்பத்திக் குழு அலுவலகங்களிலும், கிராமசேவையாளர் அலுவலகங்களிலும், கமநல சேவை நிலையங்களிலும், அரச/அரச சார்பற்ற நிறுவனங்களிலும் விண்ணப்பங்களைப் பெற்று பூரணப்படுத்திய பின்னர் அதே அலுவலகங்களில் நேரடியாக கையளிக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் அறிவித்துள்ளனர். (எ)

**கர்நாடகம்...**
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
நடைபெற்றது.

224 உறுப்பினர்களைக் கொண்ட கர்நாடக சட்டசபையில் 115 ஆசனங்களை ஜனதா தள் கைப்பற்றியுள்ளது.

294 உறுப்பினர்களைக் கொண்ட ஆந்திர மாநில சட்டசபையில் 219 ஆசனங்களைக் கைப்பற்றிய தெலுங்கு தேசம் கட்சியின் தலைவர் என்.ரி. ராமராவ் முதலமைச்சராக இன்று பதவியேற்பார்.

ஹைதராபாத்தில் லால் பகதூர் விளையாட்டரங்கில் ஆளுநர் கிருஷ்ணகாந்த் முன்னிலையில் இந்த வைபவம் இடம்பெறும்.

சிக்கிமின் புதிய முதலமைச்சராகப் பதவியேற்கும்படி சிக்கிம் ஜனநாயக முன்னணியின் தலைவரான பவன் குமார் சாம்லின்னை ஆளுநர் அழைத்திருக்கிறார்.

32 உறுப்பினர்களைக் கொண்ட சட்டப்பேரவையில் 19 ஆசனங்களை அவரது கட்சி கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(மற்றொரு செய்தி 3 ஆம் பக்கத்தில்)

**தேசிய—**
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
தேசம் கட்சியும், ஜனதா தளம் கட்சியும் அமோக வெற்றியீட்டியிருப்பது தெரிந்ததே. (ஐ-3)

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 19 — 08 — 1916
மறைவு: 23 — 12 — 1993

அமரர்
**சபாபதிப்பிள்ளை இராசையா**
(முன்னாள் கூட்டுறவு கிளை முகாமையாளர்)

திதி: 12 — 12 — 1994

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து, பிள்ளைகளை அன்போடும், பண்போடும், அறிவோடும் வளர்த்து, நன்னிலைக்கு கொணர்ந்து விட்ட எந்தையே! இவ்வுலகவாழ்வு போதுமென்று ஏதும் சொல்லாது, இறைபதம் அடைந்தீரோ!

உங்கள் பிரிவால் வாடும்;
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

விளையாட்டரங்க வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (34144)

## மரண அறிவித்தல்

### கோணர் கந்தையா

நவக்கிரி புத்தூரைச் சேர்ந்த கோணர் கந்தையா நேற்றுக் காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும், சின்னத்துரை, யோகேஸ்வரி, இராசதுரை (சுவிஸ்), இராசலட்சுமி, மகேஸ்வரி (சுவிஸ்), தவம், தங்கேஸ்வரி, வாமதேவன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பரமேஸ்வரி, சிவசோதி, அழகரத்தினம் (சவுதி), விசயகுமார் (சுவிஸ்), தனபாலன் ஆகியோரின் அன்பு மாமனாரும், மதுராந்தகி, நிசாந்தினி, சிவதர்சன், நிரோஜன், பாமினி, செந்தூரன், வினோத், டயானா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று நண்பகல் 12.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நிலாவரை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
**க. சின்னத்துரை**
(மகன்)

ஆவரங்கால் மேற்கு,
புத்தூர்.
(நவக்கிரி) (34162)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற் லிமிற்டெட்டினால்) யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 12—12—94 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org